**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 76/2024**

**Dated: 15.05.2026**

**Deposition of Witnesses for PW - 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.பாலாஜி** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1,2 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 5,6 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

(சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)

**<u>1முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் என்னால் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் தட்டச்சு செய்யப்பட்டவை என்றால் சரிதான். என்னுடைய பிரிவு 57-ன்படியான விரிவான அறிக்கையிலும் ஆய்வாளர் விசாரணையிலும் மேற்படி ஆவணங்கள் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றும் யாரால் எங்கு வைத்து பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றும் குறிப்பிட்டு மேற்சொன்ன ஆவணங்களில் சொல்லியிருக்கவில்லை என்றால் சரிதான். தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்கள் சம்பந்தமான Pendrive அல்லது CD ஆகியவற்றையும் பிரிவு 65(B) -ன்கீழான சான்றுடன் ஆய்வாளர் விசாரணையில் நான் கொடுக்கவில்லை

என்றால் சரிதான். அதசாஆ.1 எத்தனை மணிக்கு தயாரிக்கப்பட்டது என்றால் 17.35 மணிக்கு தயாரிக்கப்பட்டது. ஆனால் மேற்படி ஆவணத்தில் 17.35 மணிக்கு தயாரிக்கப்பட்டதாக குறிப்பு எதுவும் இல்லை. பிரிவு 57-ன்படியான விரிவான அறிக்கையிலும், முதல் தகவல் அறிக்கையிலும் 17.35 மணிக்கு தகவலை பதிவு செய்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. 57-ன்படியான விரிவான அறிக்கையில் மேற்படி அதசாஆ.1 ஆவணத்தை ஆய்வாளர் எங்கு வைத்து எத்தனை மணிக்கு யார் மூலம் பெற்றுக் கொண்டார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் 57-ன்படியான விரிவான அறிக்கை ஆகியவற்றில் எனக்கு வந்ததாக சொல்லப்படும் தகவலை நான் தனி தாளில் பதிவு செய்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடப்படவில்லை. எவ்வளவு நேரம் வாகன தணிக்கை செய்தோம் என்றால் 1/2 மணி நேரம் வாகன தணிக்கை செய்தோம். முதல் தகவல் அறிக்கையிலும் பிரிவு 57-ன்படியான விரிவான அறிக்கையிலும் தகவலாளி உடன் வந்ததாகவோ அடையாளம் காட்டியதாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தகவலாளி நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலம் தகவல் சொன்னதாகவோ குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை 57-ன்படியான அறிக்கையில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. தகவலாளியின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டி அவர் சம்பந்தப்பட்ட விவரங்களை ரகசியம் காக்க வேண்டியதால் குறிப்பிடவில்லை. தகவலாளி கொடுத்த தகவல் குறித்த விவரங்களை 57 அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய நேரடி மேல் அதிகாரி எனது ஆய்வாளரா என்றால் சரிதான். எனக்கு வந்ததாக சொல்லப்படும் தகவல் குறித்த விவரங்களை எழுத்து மூலமாக எழுதி எனது நேரடி மேல் அதிகாரியான ஆய்வாளர் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அதசாஆ.1 தகவல் ஆவணத்தில் மாலை 17.00 மணிக்கு புதுக்கோட்டை அமலாக்க பிரிவு உதவி ஆய்வாளராகிய நான்

சந்தேகப்படும்படியான சண்முகம், வயது.33, த/பெ.ராமையா, வடக்கு 2-ம்வீதி புதுக்கோட்டை என்பவர் ஓட்டி வந்த TN 55 BH 7284 என்ற எண்ணுள்ள TVS King என்ற மஞ்சள் நிற ஆட்டோவில் மூன்று வெள்ளை நிற சாக்குமூட்டையில் கஞ்சா என்னும் போதை பொருளை விற்பதற்காக கொண்டு சென்ற விவரம் அறிந்து அதனை புதுக்கோட்டை மாவட்ட மது விலக்கு அமலாக்க பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஆகிய தங்களிடம் மேற்படி விவரத்தை இதன்மூலம் தெரிவித்துக் கூறுகிறேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் 17.45 மணிக்கு வாகனத்தை சோதனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 17.30 மணிக்கு சோதனை மேற்கொள்ளப்பட்டது. நான் சொல்வது போல் எனக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை என்றும் நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் ரோந்து மேற்கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அசதாஆ.1 ஆவணம் வழக்கிற்கு தோதிற்காக பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரிவு 50(1)ன்படி நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்போ சோதனை செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். அதன்படி இரண்டு Option உள்ளது என்று எனக்கு தெரியும். ஆனால் இந்த வழக்கில் 3-வது வாய்ப்பாக காவல் உதவி ஆய்வாளராகிய நானே சாட்சிகள் முன்னிலையில் சோதனை செய்யலாமா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரிவு 50(1)ஐ முறையாக கடைபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. யாருடைய முன்னிலையிலும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களிலிருந்து மாதிரிகளை பிரிவு 52(A)-ன்படி நீதித்துறை நடுவர் முன்பாக தான் எடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். ஆனால் இந்த வழக்கில் அவ்வாறு பின்பற்றவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும்

ஒவ்வொரு பொட்டலங்களிலும் தனித்தனியாக மாதிரிகள் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். 1-ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகஜரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 1-ம் எதிரியிடமிருந்து எந்தவிதமான கஞ்சாவும், ஆட்டோவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. 2-வது சம்பவ இடத்திற்கு எத்தனை மணி நேரத்தில் போனேன் என்றால் 1/2 மணி நேரத்தில் சென்றேன். என்னுடைய விசாரணை காலத்தில் எதிரி சேவகமூர்த்தி பிளாட் எண்.711 பெரியார் நகரில் வசித்தார் என்பதை காட்டக்கூடிய எந்தவொரு ஆவணமும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வீட்டின் உரிமையாளரையோ அதன் அருகில் வசிக்கும் நபர்களையோ நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அதசாஆ.10, 11 ஆகிய ஆவணங்களில் 2-ம் எதிரி சேவகமூர்த்தியின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். மகஜரை நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரிதான். மேற்படி அதசாஆ.10-ல் 1-வது காலத்தில் தேதி 17 என்பது வேறொரு மையில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரியை நான் தான் கைது செய்தேன் என்றால் சரிதான். காவல் அடைப்பு அறிக்கை என்னால் தயார் செய்ப்பட்டது என்றால் சரிதான். 1, 2 எதிரிகளுக்கு கைது குறிப்பாணை நான் தான் தயார் செய்தேன் என்றால் சரிதான். பிரிவு 57ன்படியான அறிக்கையை ஆய்வாளர் எங்கு வைத்து எத்தனை மணிக்கு பெற்றுக் கொண்டார் என்று விவரம் சொல்லப்படவில்லை என்றால் மணி குறிப்பிடப்படவில்லை. நான் சொல்வது போல் சொன்ன தேதியில் நேரத்தில் எனக்கு எந்த தகவலும் வரவில்லை என்றும் அதன் பேரில் எந்தவிதமான ரோந்து நடவடிக்கையும் நடைபெறவில்லை என்றும் எதிரிகளை சொன்ன இடத்தில் விதத்தில் நேரத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றும் எதிரிகளிடமிருந்து எந்தவிதமான கஞ்சாவும் மற்று சான்று பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் 1-ம் எதிரி எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால்

சரியல்ல. என்னால் சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு வழக்கின் தோதிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சொல்வது போல் சம்பவம் இல்லை என்றும் 1, 2 எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்கள், முதல் தகவல் அறிக்கை ஆகியவை என்னுடைய கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஆலோசனையின் பேரில் மேற்படி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்கள் சாட்சிய சட்டம் பிரிவு 25-ன்படி செல்லாது என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**மறு விசாரணை** இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 76/2024**

**Dated: 15.05.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| பெயர் | : | **திரு. கணேசன்** | வயது | : | |
|---|---|---|---|---|---|
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1, 2 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 5, 6 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

(சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சோதனை குறித்த தகவல் வந்த விவரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சார்பு ஆய்வாளர் அழைத்ததன் பேரில் தான் நான் சென்றேன் என்றால் சரிதான். அவ்வாறு அழைத்தபோது நான் எங்கிருந்ததேன் என்றால் ரோந்து பணியில் பால்பண்ணை, PLA சர்க்கிலில் ரோந்தில் இருந்தேன்.எனக்கு சோதனைக்கு உதவிக்கு வருமாறு எத்தனை மணிக்கு சார்பு ஆய்வாளர் போன் செய்து அழைத்தார் என்றால் 17.00 மணிக்கு அழைத்தார். இந்த வழக்கில் நான் எந்தவித ஆவணத்தையும் என் கைப்பட

எழுதவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஆவணங்கள் எதிலும் நான் சாட்சியாக இல்லை என்றால் சரிதான். எனது ஆய்வாளர் விசாரணையிலும் எனது முதல் விசாரணையிலும் வழக்கு ஆவணங்கள் யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்றும் எங்கு வைத்து யாரால் பிரிண்ட் எடுக்கப்பட்டது என்ற விவரத்தையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் காவல் நிலைய கணிணி காவலர் சரவணன் மூலமாக தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுத்தாக சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் மேற்படி விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் சார்பு ஆய்வாளருடன் ரோந்துக்கு செல்லவில்லை என்றும் அங்கு வைத்து 1, 2 எதிரிகளை பிடிக்கவில்லை என்றும் அவர்களிடமிருந்து எந்த தடய சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும் உயர் அதிகாரியின் ஆணைக்கிணங்க பதிவு செய்யப்பட்ட வழக்கில் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மற்ற எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1, 2 எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலங்கள் கொடுக்கவில்லை என்றும் மேற்படி ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேல் அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.